DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **மகேஷ்குமார்** | Caste | : | |
| Father Name | : | **செல்வராஜ்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **26.03.2026.**

**PW - 5**

**( 1** முதல் **13, 15, 16** எதிரிகள் ஆஜர்**. 14** ஆம் எதிரி ஆஜரில்லை**.** மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**)**

**முதல் விசாரணை**

**நான் திருச்சி மாவட்டம், திருவானைக்கோவில், மேலகொண்டையம்பேட்டையில் குடியிருக்கிறேன். கண் மருத்துவமனையில் விற்பனை பிரிவில் வேலை செய்கிறேன். அசா.1 விஜயராஜ், அசா.2 முருகானந்தம், அசா.3 உத்தமன், அசா.4 செந்தில்குமார் ஆகியோரை தெரியும். ஆஜர் 1 முதல் 13, 15, 16 எதிரிகளை தெரியாது. இன்று ஆஜராகாத 14 ஆம் எதிரி சுரேஷ்குமாரை தெரியாது. கடந்த 2020 ஆம் வருடம் 09 ஆம் தேதி நானும், அசா.1 விஜயராஜும் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து மேலகொண்டையம்பேட்டை தெரு வழியாக மெடிக்கல் ஷாப்பில் மருந்து வாங்க**

இரவு 08.00 மணிவாக்கில் சென்றுகொண்டிருந்தோம். அந்த தெரு வழியாக செல்லும்போது வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டோம், விபத்து நடந்துவிட்டது. அதில் எனக்கும், அசா.1 க்கும் காயம் ஏற்பட்டது. அடிபட்ட உடன் நாங்கள் முதலில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு போய்விட்டு பிறகு திருச்சி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர் பெயர் குமார். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோதும் இப்படி தான் சொன்னேன்.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் விசாரித்தபோது, நான் மேலகொண்டையம்பேட்டையில் வசிப்பதாகவும், நடு கொண்டையம்பேட்டை பக்கத்து தெரு என்றும் சொன்னேன். எங்கள் தெரு பசங்களுக்கும், நடு கொண்டையம்பேட்டை தெரு பசங்களுக்கும் ஏற்கனவே பிரச்சனையிருந்தது என்றும், பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் அனைவரும் நடு கொண்டையம்பேட்டையை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. 09.08.2020 அன்று இரவு 10.00 மணிக்கு நானும், அசா.1ம் சேர்ந்து அசா.1 ன் அப்பாவிற்கு மாத்திரை வாங்க இருசக்கர வாகனத்தில் போனோம் என்றும், எங்களை தாக்கிய நபர்கள் நடுகொண்டையம்பேட்டையை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது மேற்படி தேதியில் என்னை ஆஜர் எதிரிகள்தான் கெட்ட வார்த்தையால் திட்டி, சவுக்கு கட்டானாலும், கைகளாலும் அடித்து தாக்கி கொலை முயற்சி செய்ததாக சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள்தான் அசா.1யும், என்னையும் தாக்கி, என் வண்டியையும் அடித்து

சேதப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு, வழக்கிலிருந்து எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.